44

நாடோடி

சித்திரை மாதத்து வெய்யில் அப்பா! என்ன தாபம்! எனக்குப் பொழுது போகவில்லை. வெயில் எங்கேயாவது போவோமென்றால் இயற்கையின் அக்னி ஜ்வாலை. 'சிவனே' என்று முழங்காலைக் கட்டிக்கொண்டு திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். மெல்லிய காற்றால் அலைக்கப் பட்ட சருகுகள். வீதியில் ஒன்றையொன்று ஓடிப்பிடித்து, சிருஷ்டியின் தத்துவத்தை சித்தரித்துக் காட்டிக் கொண்டிருந்தன. ஒன்றையும் லட்சியும் செய்யாமல் ஒரு எருமை அன்னநடை போட்டுக் கொண்டு போயிற்று. அந்த வெய்யிலில்! எங்கு பார்த்தாலும் ஒரே அற்புதமயம்!

ஒன்றுமில்லை. கேவலம்,பைராகிதான். ஆஹா! அவன் களைத்த முகம்! நீண்டு தொங்கும் முண்டாசு; பயமற்ற பரிசுத்தமான மனம்...

அடாடா! நானும் ஒரு பைராகியாக இருந்தால்...

அவனோ, 'திக்கு வேறில்லை, உன் திருவடியில் புகுந்தேன்' என்று ஏதோ ஒரு பைத்தியக்காரப் பாட்டைப் பாடிக்கொண்டே வந்தான். எங்கள் வீட்டுத் திண்ணையருகில் வந்ததும்; 'அப்பா என்ன உஷ்ணம்?' என்று சொல்லிக்கொண்டு அதில் உட்கார்ந்தான். முகத்தில் நல்ல தெளிவு. 'ஐயா, நீங்கள் யார்? என்றேன்.

'தட்டுக்கட்டை முண்டத்தில் தட்டுக்கெட்ட முண்டம்!' என்றான். 'ஆயிரத்தோடு, ஆயிரதோராவது பக்கிரி!'

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது! அவனுடைய பேச்சில் நாடோடியின் வெலவெலப்பில்லை கவர்ச்சி தரும் கம்பீரம் இருந்தது.

'கொஞ்சம் குளிர்ந்த ஜலம் வேண்டும், குடிக்க கொடுக்க முடியுமா?' என்றான்.

'அம்மா-ராஜம்! கொஞ்சம் தீர்த்தம் கொண்டு வாம்மா!' என்றேன் நான்.

குழந்தை ராஜம் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு நின்றாள். அவள் என்னுடைய ஒரே செல்லக்குழந்தை.

பாரததேவி, 13.08.1939

அந்த பைராகி சொன்னாள் – 'சார்! இப்பொழுதுதான் சந்நியாசி, பிச்சைக்காரன், எவனுக்குமே உயிர் இருக்கிறதாவே நினைப்பு இல்லையே! அவன் ஒரு ஆடு, மாடு இவைகளுக்கு சமானமாகத்தானே எண்ணப்படுகிறான்? எனக்கும் இதுமாதிரி ஒரு குழந்தை இருந்தது ஸார்! என்றான் தளர்ந்த குரலில்.

அவன் மனதில் என்னென்ன எண்ணங்கள் வந்தனவோ; என்னமோ? தனக்கும் ஒரு வீடு -குடிசையாக இருக்கலாம்-மனைவி, ஒரு சின்ன ராஜம்...

'அவள் இறந்து போய்விட்டாளா – அந்தக் குழந்தை?' என்று கேட்டேன். எனக்கு வேதனையாக இருந்தது.

அவன் திடுக்கிட்டுப் போனான். 'நமஸ்காரம், அப்படிச் சொல்லாதீர்கள். அவள் தீர்க்காயுசாக இருக்க வேண்டும்' என்றான்.

எனக்கு கண்களில் ஜலம் வந்துவிட்டது. 'ரொம்ப மன்னிக்க வேண்டும் 'இருந்தாள்' என்று சொன்னீர்களே என்று எண்ணி, தவறிப் போய்ச் சொல்லிவிட்டேன்' என்று மனம் விட்டுச் சொன்னேன்.

'அதெல்லாம் ஒன்றுமில்லை; நான் உங்களை மன்னிக்கவாவது? நீங்கள் எண்ணிக் கொண்டதில் உண்மை முக்கால் பங்கிருக்கிறது என்னைப் பொறுத்த வரையில் அவள்... இறந்து தான்போய் விட்டாள். ஆனால் அவள் உயிருடனிக்கிறாள்.

நான் புதிர் போடவில்லை. விகடம் செய்ய எனக்குத் தெரியாது. உண்மையை நான் சொல்லுகிறேன்.

உங்களுக்குக் காரியமிருக்குமோ, என்னமோ...'

வாரத்துக்கு ஒருமுறை லீவு என்று ஏட்டில் எழுதி ஆபிஸில் வைத்திருக்கிறது. ஆனால் அன்றைக்கும் ஆபீஸில் போய் ஒருகுரல் அழுதுவிட்டு வந்தால்தான் அந்த தலைமை அதிகாரிக்கு திருப்தி. ஆனால், அன்று அத்தி பூத்தது போல் உண்மையாகவே லீவு கிடைத்திருந்தது. எனவே 'இல்லை. இன்றைக்கு ஒரு வேலையுமில்லை' என்றேன்.

'என்னுடைய இருபத்தெட்டாவது வயதிலேயே... அது போகட்டும், ஸார், ஊர்க்கதை எல்லாம் உங்களுக்கென்னத்திற்கு... என்னுடைய மனைவி இறந்து போனதிலிருந்து சொன்னாலே உங்களுக்குப் போதும். ஒரு சின்னப்பெண் குழந்தையை விட்டுவிட்டு அவள் போனாள். என்னமோ ஆசை, பைத்தியக்கார ஆசை ! குலுங்கக் குலுங்க நகைகளைப் போட்டு அந்த குழந்தையைப் பார்ப்பதில் எனக்கு திருப்தி; ஒரு ஆசை! மூன்று வயதுக் குழந்தை. கிளியைக் கூட்டிலடைத்து வைப்பது போல், குழந்தைகளை வீட்டிற்குள் அடைத்துப்போடும் வழக்கம் எனக்கில்லை. ஆனால்...

அந்த வழக்கம் எனக்கு இருந்திருக்கப்படாதா?...

ஒருநாள் உடல் கொள்ளாமல் நகைகளைப் போட்டுக்கொண்டு திண்ணையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் காணோம். எனக்குப் புல்லரித்துப் போயிற்று. ஊரெல்லாம் தேடினேன். அவளைக் காணோம். ஒருதினம், இரண்டு, மூன்று... அவள் போய் விட்டாள். திரும்பி வரவே இல்லை.

என்னை உலக வாழ்கையில் சேர்த்துக் கட்டியிருந்த கயிறு எப்பொழுது அறுந்ததோ, அதற்குப் பிறகு அந்த ஊரில் இருக்க எனக்கு கஷ்டமாகப் போய்விட்டது எதிலும் ஒரு வெறுப்பு.

ஊர் ஊராக, தேசம் தேசமாகச் சுற்றிக்கொண்டு வரும்போது, ஒரு ஊரில் ஒரு இரவு தங்க நேரிட்டது. அங்கே, மஹானுபாவர்கள், எவரும் அவரவர்கள் வீட்டுத்திண்ணையில் கூடத் தங்கக்கூடாது என்று சொல்லிவிட்டனர்.

பெரிய புல்வெளி! நிர்மலமான ஆகாயம். எங்கிருந்தோ புஷ்பித்தது போல் ஒரு வெண்தாமரை வானத்தில் மிதந்தது. மெல்லிய பூங்காற்று! படுத்துக்கொண்டேன்.

எதெனாலென்று தெரியவில்லை. தூங்கிக்கொண்டிருந்தவன் திடுக் கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். தூரத்திலிருந்து சங்கீத சப்தம் வந்து கொண்டிருந்தது.... சார், நான் ஒரு சங்கீதப் பைத்தியம்... பிறகு வெகு நாழி வரையில் தூக்கமே வரவில்லை. அந்தப் பாட்டு வந்த திக்கை நோக்கி போனேன்.

கூத்தாடிகளின் கூட்டத்தில் ஏதோ 'தெருக்கூத்து' நடந்து கொண்டி ருந்தது! நான் போய் ஒரு நிமிஷம்கூட நிற்கவில்லை. திடீரென்று இருந்த விளக்குகளெல்லாம் அணைந்துவிட்டன. என் அதிர்ஷ்டத்தைப் பார்த்து நானே சிரித்துக்கொண்டு வெளியில் போவதற்காகத் திரும்பினேன்.

யாரோ என் மேல் தடுக்கி விழுந்தார்கள்! தூக்கிவிடலாமென்று கீழே குனிந்தேன். ஒரு பெண்!

'யாரம்மா நீ?' என்றேன் என்னை அறியாமலே.

அவள் கொச்சையாகத் தான் தமிழ் பேசினாள்! அந்தக் கூத்தாடிகள், அவளைத் திருடிக்கொண்டு வந்து விட்டார்களாம். அவள் சிறு குழந்தை யாக இருக்கும்போது... கடைசியில் அவளை நான் கண்டு பிடித்து விட்டேன்! என் குழந்தையை! அவள் என் குழந்தைதான். நிச்சயம்! அந்த நிலாவில் எனக்கா அடையாளம் தெரியாது.?

அவள், அவர்களை விட்டுவிட்டு ஓடிப்போய்விட வேண்டும் என்று என்னை அதற்கு உதவி செய்யச் சொன்னாள். உதவி என்ன? அவளும் ஓடினாள், நானும் ஓடினேன். அவர்களிடமும் தப்பித்துக்கொண்டோம்!

நான்தான் அவருடைய தகப்பனார் என்று எவ்வளவோ தடவை களில், அவளுக்குச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தேன். ஒரு தடவை சொல்லியும் விட்டேன். ஆனால்... ஆனால்... அவள்

சிரித்தாள். 'அப்படியிருந்தாள்-நான் எவ்வளவோ சந்தோஷமாக இருப்பேனே?' என்றாள்.

கண்காணாச் சீமைக்கு வந்து சேர்ந்தோம். அவளே ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தினாள்.

அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதில், அவள் என் அருகில் இருக்கிறாள் என்ற எண்ணத்தில் எனக்கு ஒரு சாந்தி! ஆனால், எங்கள் ரத்த பாசம் இவ்வளவு விலகிவிட்டதே என்ற துக்கம் என் நெஞ்சை அடைத்தது. சொல்லியும் அவள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லையே என்ற ஏக்கம் ஒரு பக்கம்.

எப்படி இருந்தாலென்ன? அவள் என்னுடையவள். இனிமேல், என்னைவிட்டுப் போகமாட்டாள், என்ற எண்ணம் எனக்கு!

அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது!

ஒருநாள் சாயங்காலம் வெளியிலிருந்து வந்தேன். உள்ளே எவனோ அவளோடு பேசிக்கொண்டிருப்பது, கேட்டது! சப்த சமுத்ரத்தின் அலைகளும் ஒன்றாகத் திரண்டு வந்து என் நெஞ்சில் மோதின! ஏனோ?

என்ன இருந்தாலும் அவளல்லவா எஜமானி? நான் பரதேசி தானே! அவள்தான் என்னை ஏற்றுக்கொள்ளவில்லையே!

அவன் போனதும், அவள் என்னிடம் வந்தாள். அவளுடைய முகம் மிகவும் களங்கமுற்றிருந்தது. என் மனக் கொந்தளிப்பெல்லாவற்றையும் கூட அடக்கிக்கொண்டு 'அம்மா! அவன் யார்?' என்றேன்.

அவள் தயங்கினாள். ரோஜா புஷ்பத்தின் புதுமை அப்பொழுது அவள் இதழ்களில் இல்லை. வெளுத்து வாடிய, முகத்தில் அவள் உள்ளத்தின் போராட்டம் நன்றாக தெரிந்தது. துடிக்கும் உதடுகளினின்றும் வார்த்தைகள் தடுமாறி வந்து விழுந்தன.

'தந்தைக்கு சமானமானவர் நீங்கள்' என்றாள்.

அந்தக் கூத்தாடிக் கூட்டத்திலிருந்து என்னைக் காப்பாற்றியதில் என் உயிரையே திருப்பி என்கு கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு நான் எவ்வளவோ நன்றியுடையவளாக இருக்கிறேன்...'

அவள் இதற்கு மேல் ஒன்றும் சொல்லத்தான் இல்லையோ; அல்லது சொல்லி, என் காதில்தான் விழவில்லையோ தெரியவில்லை.

'நான் உன் நன்றியை வேண்டவில்லை. நீதான் எனக்கு வேண்டும்... நீ என்றைக்கும் என் குழந்தையாக இருக்க வேண்டும்...'

அவளுக்குக் கண்களில் ஜலம் தளும்பி நின்றது. 'உங்கள் அன்பிற்கு நான் எவ்வளவு செய்தாலும் போதாது. ஆனால் நான் வாழவேண்டும். முதலில், வாழ்க்கையில் நான் ஊன்றிக்கொள்ள வேண்டும். பிறகு தான் என் கடமைகளை, நிறைவேற்ற முடியும். இல்லையா? நீங்களே சொல்லுங்கள்' என்றாள்.

ஆம்! அவள் வாழ்க்கையில் நான் ஏன் தலையிட வேண்டும். அவள்

என் குழந்தையாகவே இருக்கலாம். ஆனால் அவளை இழக்க எனக்கு உரிமை கிடையாது. இழந்த பிறகு, திரும்பத் திரும்ப உரிமை கொண்டாடு வதிலும் அர்த்தமில்லை.

அவள் என்னை விட்டுப் பிரிந்து போவதை என் கண்களால் பார்க்க முடியாது. அவளுக்கு ஊன்றுகோல் கிடையாது எனக்கு இருந்த ஊன்று கோல், என்னையும் விட்டு போகிறது.

அன்று இரவே நான் புறப்பட்டு விட்டேன். இமாசலத்திற்குப் போகிறேன்' என்று சொல்லிமுடித்தான் அப்பைராகி போன்றவன்.

அப்பொழுது வெய்யில் கொஞ்சம் தாழ்ந்துவிட்டது.

●